# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

**முன்னிலை: திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 06–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**I.A.No.05 of 2025 in O.S. No. 171 of 2018**

1. P. வெங்கடாசலம்

2.V.ஆனந்தன்

3.V.கார்த்திகேயன் .. மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

–எதிராக–

பெருமாள் .. எதிர்மனுதாரர் / வாதி

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 06.03.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ஆறுமுகம் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.குமரவேல் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவுரை

மனுதாரர்கள் உலிபுரம் கிராம நிர்வாக அலுவலரை தாவா சொத்துக்களை பார்வையிட்டு இருதரப்பினரும் எவ்வாறு பொது

கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து வருகிறார்கள் என்பது குறித்தும் மற்றும் வருவாய்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல், அ பதிவேடு, புலவரைபடம் ஆகிய ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் நேரில் சாட்சியம் அளிக்க அழைத்து விசாரணை செய்ய அனுமதிவேண்டி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டம் 151–ன் கீழ் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார்.

**<u>2. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :</u>**

தாவாவில் பிரதிவாதி தரப்பில் மேற்கொண்டு சாட்சிகள் விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ளதாகவும், 1–ம் மனுதாரருக்கும், 1–ம் எதிர்மனுதாரருக்கும் உலிபுரம் கிராம சர்வே எண்.206/4C–ல் உள்ள பொதுக் கிணற்றில் தலா பாதிப் பாதி பாக உரிமை உள்ளது என்றும், சர்வே எண்.206/4B –ல் விவசாய நிலங்களும் மற்றும் சர்வே எண்.207/5B–ல் 1–ம் மனுதாரருக்கும் தனிப்பட்ட முறையில் விவசாய நிலமும் உள்ளது என்றும், மேற்படி அனைத்து நிலங்களுக்கும் சர்வே எண்.206/4C–ல் உள்ள பொது கிணற்றிலிருந்து பைப் லைன் மூலம் தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்து வருவதாகவும், இந்த நிலையில் உலிபுரம் கிராம நிர்வாக அலுவலர் தாவா சொத்துக்களை பார்வையிட்டு இருதரப்பினரும் எவ்வாறு பொது கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து வருவது குறித்தும் மற்றும் வருவாய்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல், அ பதிவேடு, புலவரைபடம் ஆகியவைகளை ஒப்படைத்து கிராம நிர்வாக அலுவரை நீதிமன்றத்தில் நேரில் சாட்சியம் அளிக்கவும் அனுமதியளிக்கவேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர் மறுத்துள்ளார். மனுதாரர்கள் தங்களது நிலங்களுக்கு சர்வே எண்.206/4C–ல் உள்ள பொது கிணற்றிலிருந்து பைப் லைன் மூலம் தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்து வருவதாக கூறுவது பொய் என்றும், அவர் இந்த பொது கிணற்றிலிருந்து பைப் லைன் மூலம் தண்ணீர் பாயச்சி வருகிறார் என்பதை நிரூபிக்க உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 18–ஆம் கட்டளையின் 18–ஆம் விதியின் கீழே நேரடியாக சென்று பார்வையிட வேண்டியதில்லை என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

**4. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?*

5. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>6. தீர்வு:</u>**

மனுதாரர்கள் தங்கள் நிலங்களுக்கு தாவா சொத்தான சர்வே எண். 206/4C–ல் உள்ள பொது கிணற்றிலிருந்து பைப் லைன் மூலம் தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்து வருவதாகவும், இந்த நிலையில் உலிபுரம் கிராம நிர்வாக அலுவலர் தாவா சொத்துக்களை பார்வையிட்டு இருதரப்பினரும் எவ்வாறு பொது கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து

வருகின்றனர் என்பது குறித்தும், தாவா சொத்திற்கான வருவாய்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல், அ பதிவேடு, புலவரைபடம் ஆகியவைகளை ஒப்படைத்து கிராம நிர்வாக அலுவரை நீதிமன்றத்தில் ஆஜராகி நேரில் சாட்சியம் அளிக்க அனுமதியளிக்கவேண்டியும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

வழக்கு ஆவணங்கள் மற்றும் மனுவை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளதுபோல் தாவா சொத்தில் உள்ள பொதுகிணற்றில் வழக்கின் இருதரப்பினரும் எவ்வாறு அனுபவித்து வருகிறார்கள் என்பது குறித்து கிராமநிர்வாக அலுவலர் நேரில் சென்று பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட இயலாது என்றும், அவ்வாறான சங்கதிகளை நிரூபிக்க மனுதாரர்கள் கோருவதுபோல் கிராம நிர்வாக அலுவலரை நேரில் சென்று பார்வையிட உத்தரவிடுவது அவசியமற்ற ஒன்று என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

அதேசமயம், மனுதாரர்கள் மனுவில் குறிபிட்டுள்ள தாவா சொத்தான சர்வே எண்.206/4C தொடர்பான வருவாய்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல், அ பதிவேடு, புலவரைபடம் ஆகியவைகளுடன் நீதிமன்றத்தில் ஆஜராகி நேரில் சாட்சியம் அளிக்க அனுமதியளிக்கவேண்டியது இவ்வழகிற்கு அவசியம் என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், எதிர்மனுதாரருக்கு, மனுதாரர்கள் தரப்பில் ஆஜர் ஆகும் கிராம நிர்வாக அலுவலரை குறுக்கு விசாரணை செய்ய முழு உரிமை உள்ளது என்பதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவானது கிராம நிர்வாக அலுவலர் வருவாய் ஆவங்களுடன் ஆஜராகி சாட்சியம் அளிக்க மட்டும் இம்மனு அனுமதித்து உத்தரவிடுகிறது.

**இ.ம.வ. எண் 05/2025 இன் அ.வ.எண்.171/2018**

**7. முடிவு:**

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 06–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.03.06 18:30:58 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** –இல்லை–

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் :** –இல்லை–

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.03.06 18:31:05 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ.,(மு.கூ.பொ.) ஆத்தூர்.**

**இ.ம.வ. எண் 05/2025**

**----------------**

**அ.வ. எண் 171/2018**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 06.03.2026